டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 13.12.2024 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 146 - Madurai | Online Edition

# உருவாகிறது புதிய காற்றழுத்தம்! வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை!!

சென்னை, டிச.12

வரும் 15ம் தேதி அந்தமான் கடலோர பகுதியை ஒட்டி புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகிறது என வானிலை ஆய்வு மைய தென்மண்டல தலைவர் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.




இது குறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய பாலச்சந்திரன், தமிழ்நாட்டில் கடந்த 36 மணி நேரத்தில் கடலோர மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை தீவிரமாக உள்ளது.

வடகிழக்கு பருவமழை மேலும் தீவிரமடையும். வங்கக்கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு, குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவிழக்கும். காற்றழுத்த தாழ்வு பகுதி மெதுவாக நகர்வதால், மேகக்கூட்டங்கள் தமிழகம் முழுவதும் பரவி உள்ளது. பரவலாக மிதமான மழையும், ஆங்காங்கே கனமழைக்கும் வாய்ப்புள்ளது.

வரும் 15ம் தேதி அந்தமான் கடலோர பகுதியை ஒட்டி புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகிறது. புதிய காற்றழுத்த தாழ்வு பகுதியால் தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு உள்ளது. ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுகுறைய வாய்ப்புள்ளது. நெல்லை, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் விடுக்கப் படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கச்சா எண்ணெய் இறக்குமதியை சார்ந்திருப்பதை குறைக்க நடவடிக்கை

புது தில்லி, டிச.12

கச்சா எண்ணெய் மீதான இறக்குமதியை சார்ந்திருப்பதைக் குறைக்க அரசு ஒரு பல்முனை உத்தியைக் கடைப்பிடிக்கிறது. பொருளாதாரத்தில் இயற்கை எரிவாயுவின் பங்கை அதிகரித்தல், எரிவாயு அடிப்படையிலான பொருளாதாரத்தை நோக்கி நகர்தல், எத்தனால் போன்ற புதுப்பிக்கத்தக்க மற்றும் மாற்று எரிபொருள் களை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நாடு முழுவதும் எரிபொருள் / மூலப்பொருளாக இயற்கை எரிவாயுவின் பயன்பாட்டை ஊக்குவிப்பதன் மூலம் தேவைக்கு மாற்றானதாக இது இருக்கும்.

அழுத்தப்பட்ட உயிரி எரிவாயு மற்றும் உயிரி டீசல், மின்சார வாகன மின்னேற்றி நிலையங்கள் உள்கட்டமைப்பை உருவாக்குதல், சுத்திகரிப்பு செயல்முறை மேம்பாடுகள், எரிசக்தி திறன் மற்றும் பாதுகாப்பை ஊக்குவித்தல், பல்வேறு கொள்கைகள் முன்முயற்சிகள் மூலம் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தியை அதிகரிப்பதற்கான முயற்சிகள் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அழுத்த பட்ட உயிரி எரிவாயுவை வாகன எரிபொருளாகப் பயன் படுத்துவதை ஊக்குவிப்பதற்காக, குறைந்த கட்டணத்துடனான போக்குவரத்து சேவையை நோக்கிய நிலையான மாற்று முன்முயற்சியும் தொடங்கப்பட்டுள்ளது.

கச்சா எண்ணெய் இறக்குமதியை பன்முகப்படுத்துதல், உள் நாட்டுச் சந்தையில் பெட்ரோல், டீசல் கிடைப்பதை உறுதி செய்ய அனைவருக்குமான சேவை கடமையை வலியுறுத்துதல், பெட்ரோலில் எத்தனால் கலப்பதை அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளில், பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களின் எத்தனால் கலக்கும் திட்டத்தின் விளைவாக 30.09.24 நிலவரப்படி சுமார் ரூ.1,08,655 கோடி அந்நியச் செலாவணி சேமிக்கப்பட்டுள்ளது. சர்க்கரை அடிப்படையிலான தீவனத்திலிருந்து தயாரிக்கப்படும் எத்தனால் சர்க்கரை ஆலைகள்

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

அதன் உபரி சர்க்கரை கையிருப்பைக் குறைக்கவும், கரும்பு விவசாயிகளின் நிலுவைத் தொகையை வழங்க முன்கூட்டியே வருவாயை ஈட்டவும் உதவியது.

பெட்ரோலில் 20% எத்தனால் கலப்பதன் மூலம், விவசாயி களுக்கு ஆண்டுக்கு ரூ.35,000 கோடிக்கு மேல் வழங்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு இணை அமைச்சர் சுரேஷ் கோபி இந்தத் தகவலைத் தெரிவித்தார்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# மழை வெள்ளத்தினால் ஏற்பட்ட பயிர் பாதிப்பு குறித்து சட்டமன்ற உறுப்பினர் திடீர் ஆய்வு



தஞ்சாவூர், டிச.12

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் வட்டாரத்தில் சம்பா நெல் பயிர் 4100 எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு நெல் பயிர் வளர்ச்சி பருவம் தண்டு உருளும் பருவம் மற்றும் பூக்கும் பருவம் போன்ற பல்வேறு வளர்ச்சி நிலைகளில் உள்ளது. இந்நிலையில் அக்டோபர் மாதத்தில் இருந்து வடகிழக்கு பருவமழை தொடர்ச்சியாக அதிக அளவில் மதுக்கூர் வட்டாரத்தில் பெறப்பட்டுள்ளது தொடர்ந்து நெல் பயிரின் பல்வேறு வளர்ச்சி நிலைகள் பாதிக்கப்பட்டுள்ளது.

அதிக பள்ளக்காலிலும் வடிகால் வாய்க்காலுக்கு அருகில் உள்ள வயல்களும் வாய்க்கால் நீர் நிரம்பும் பட்சத்தில் வயலுக்குள் உட்புகுந்து பாதிப்பினை ஏற்படுத்துகிறது. வடகிழக்கு பருவமழைக்காக வேளாண் உதவி அலுவலர்கள் கிராம நிர்வாக அலுவலர்களுடன் இணைந்து பயிர் பாதிப்பு விபரங்களை ஆய்வு செய்து வருகின்றனர். ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள தொடர்பு விவசாயிகள் மூலமும் நேரடியாக வயலினை விவசாயிகளுடன் ஆய்வு செய்தும் பயிர் பாதிப்பு நிலையினை கண்காணித்து வருகின்றனர்.

மதுக்கூர் வட்டாரத்தில் நேற்றிலிருந்து பெறப்பட்ட தொடர் மழையினால் ஏற்பட்டபயிர் பாதிப்பினை இன்று கன்னியா குறிச்சி, சொக்கனாவூர் மற்றும் பெரிய கோட்டை கிராமத்திலும் பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அண்ணாதுரை மற்றும் தஞ்சை மாவட்ட வேளாண் துணை இயக்குனர் மாலதி உள்ளிட் டோர் நேரடியாக பார்வையிட்டனர். பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மதுக்கூர் வட்டாரத்தில் பயிர் சாகுபடி பரப்பு மற்றும் பயிர் பாதிப்பு விவரங்களை வேளாண் உதவி இயக்குனர் திலகவதியிடம் கேட்டறிந்தார். பயிர் பாதிப்பு குறித்து விவசாயி களிடமிருந்து தகவல் பெறப்பட்டவுடன் நேரடியாக வயலில் உரிய அலுவலர்களுடன் ஆய்வு செய்து விவசாயி களுக்கு உரிய நிவாரணங்களை பெற்று தர அறிவுறுத்தினார். பின் வேளாண் துணை இயக்குனர் மதுக்கூர் வேளாண் உதவி இயக்குனர்

அலுவலகத்தில் வேளாண் உதவி அலுவலர்களிடம் மத்திய திட்ட பணிகளின் சாதனை விபரம் குறித்து கேட்டறிந்தார்.

வேளாண் விரிவாக்க மையத்தினை ஆய்வு செய்து உளுந்து மற்றும் நெல் விதைகளை விவசாயிகளுக்கு மானிய விபரங் களை எடுத்து கூறி வழங்கிட கேட்டுக் கொண்டார். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயி ராமச்சந்திரனுக்கு 50% மானிய விலையில் பவர் ஸ்பிரேயர் வழங்கி பின் மதுக்கூர் வடக்கில் முன்னோடி இயற்கை விவசாயி மூர்த்தி மற்றும் நைனா முகமது வயலில் பயிரிடப் பட்டுள்ள கருப்பு கவுனி மற்றும் தூயமல்லி ரகங்களின் பயிர்நிலை குறித்து ஆய்வு செய்தார். கருப்பு கவுனிரகத்தில் 83 ஆம் நாளில் தேவையற்ற அதிக இலைகளை விவசாய தொழிலாளர் உதவியுடன் இலைகளை வெட்டி மீண்டும் வயலிலேயே காலால் மிதித்து விடுவதாக விவசாயி மூர்த்தி கூறினார். இந்த தொழில்நுட்பத்தினால் வயல் பணிகள் மேற்கொள்வது எளிதாகவும் மகசூல் குறைவு ஏதுமில்லை என்றும் தெரிவித்தார். ஒற்றை நாற்று முறையில் கருப்பு கவுனி ரகம் சிறந்த வளர்ச்சி நிலையில் உள்ளது. இதேபோன்று இயற்கை விவசாய சாகுபடி செய்யும் விவசாயிகள் மீன் அமினோ அமிலம் ஈ எம் கரைசல் போன்றவை மட்டுமே பயன்படுத்தி பாரம்பரிய ரகங்களை சாகுபடி செய்து அதிக லாபம் அடைந்திடவும் நன்மை செய்யும் பூச்சி ஆன பொறி வண்டுகளை அதிக அளவில் ஈர்க்க வரப்பில் உளுந்து பயிரிட்டு உள்ளதையும் வேளாண் துணை இயக்குனர் நேரில் கேட்டறிந்தார்.

இதைப் போல அனைத்து விவசாயிகளும் நெல் சாகுபடி எதுவானாலும் தேவையற்ற உர செலவை குறைத்து இயற்கை உரங்களை விவசாயிகளே உற்பத்தி செய்து நஞ்சில்லா உணவு உற்பத்திக்கும் நலமான வாழ்விற்கும் அடித்தளமாய் இருக்க கேட்டுக் கொண்டார். ஆய்வின்போது வேளாண்மை அலுவலர் சரவணன், வேளாண் உதவி அலுவலர்கள் பூமிநாதன், ஜெரால்டு, தினேஷ், முருகேஷ், சுரேஷ் மற்றும் ராமு ஆகியோர் உடன் இருந்தனர். வேளாண் உதவி இயக்குனர் மத்திய மாநில திட்ட பணிகளின் திட்ட சாதனை விபரங்களை எடுத்துரைத்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 12.12.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 35 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 35 | 40 | 57 | உருளை (பிற) | 30 | 38 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 50 | 57A | உருளை(ஊட்டி) | 30 | 50 |
| 2 | வெண்டை | 50 | 54 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 22 | 25 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 35 | 40 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 20 | 24 | 60 | கேரட் | 50 | 58 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 80 | 84 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 50 | 60 |
| 6 | புடலை | 35 | 38 | 62 | நூல்கோல் | 40 | 44 |
| 7 | பீர்க்கன் | 45 | 50 | 63 | டர்னிப் | 40 | 44 |
| 8 | சுரைக்காய் | 25 | 30 | 64 | மு.கோஸ் | 25 | 30 |
| 9 | பாகற்காய் | 36 | 40 | 65 | மு.கோஸ்(கலர்) | 0 | 0 |
| 10 | கொத்தவரை | 46 | 50 | 66 | காளிபிளவர் | 45 | 50 |
| 11 | பூசணி | 15 | 18 | 67 | பட்டாணி | 110 | 120 |
| 12 | அரசாணி | 18 | 22 | 68 | பூண்டு | 260 | 338 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 25 | 30 | 69 | இஞ்சி | 48 | 100 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 22 | 26 | 70 | புருக்கோலின் | 160 | 190 |
| 15 | சி.வெங்காயம் | 58 | 62 | 71 | பென்னி பீன்ஸ் | 60 | 70 |
| 16 | பெ.வெங்காயம் | 55 | 61 | 72 | குடமிளகாய் | 50 | 54 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 35 | 38 | 73 | ஊட்டி அவரை | 120 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 60 | 66 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 0 | 0 | 71A | | | |
| 20 | தேங்காய் | 54 | 58 | | | | |
| 21 | மாங்காய் | 55 | 60 | | | | |
| 22 | வாழைக்காய் | 28 | 32 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 42 | 46 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 50 | 55 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 22 | 26 |
| 28 | கறிவேப்பிலை | 80 | 85 | 79 | மாதுளை | 120 | 180 |
| 29 | கொத்தமல்லி | 40 | 45 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 20 | 22 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 20 | 22 | 83 | ஆரஞ்ச் | 50 | 70 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 20 | 22 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 20 | 22 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 20 | 22 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 45 | 50 |
| 40 | கோவக்காய் | 50 | 55 | 91 | பூவன் | 35 | 38 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 38 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 22 | 26 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 35 | 38 | 96 | நேந்திரன் | 60 | 65 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 42 | 48 | 97 | செவ்வாழை | 75 | 80 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 45 | 48 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 64 | 72 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 45 | 50 | | | | |
| 55A | துவரை | 60 | 65 | | | | |

# இடைக்காட்டூர் கிராமத்தில் உழவர் வயல்வெளி பள்ளியில் வேளாண்மை கூடுதல் இயக்குநர் ஆய்வு



சிவகங்கை, டிச.12

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டாத்தில் தமிழ்நாடு பாசன வேளாண்மை புத்தாக்க திட்டம் 2024-25 Phase-2 உப்பாறு உபநிலவடிப் பகுதி இடைக்காட்டூர் கிராமத்தில் உழவர் வயல்வெளி பள்ளி நேற்று 12.12.24ல் நடைபெற்றது.

இப்பயிற்சியில் சென்னை, வேளாண்மை கூடுதல் இயக்குநர் (அயம்வார்ம்) S.கண்ணையா தலைமையேற்று நீர் பாசன மேலாண்மை முக்கியத்துவம், அயம்வார்ம் திட்டம் குறித்தும் விளக்கினார்.

சிவகங்கை வேளாண்மை இணை இயக்குநர் சு.சுந்தர மகாலிங்கம், வேளாண்மை துணை இயக்குநர் (ம தி) மதுரை சாமி, சிவகங்கை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செல்வி, வேளாண்மை உதவி இயக்குநர், மானாமதுரை ஜா.இரவிசங்கர், வேளாண்மை உதவி இயக்குநர் (பயிர் காப்பீடு) காளிமுத்து, ஆகியோர் கலந்து கொண்டு உரையற்றினர். மானாமதுரை திரவ உயிர் உரஉற்பத்தி மைய மூத்த வேளாண்மை அலுவலர் கருணாநிதி ,சிவகங்கை மண் ஆய்வு மைய வேளாண்மை அலுவலர் ஆர்த்தி, மதுரை RNR அக்ரி டெவலெப்பர்ஸ் ராஜேஷ் நல்லையா ஆகியோர் தொழில் நுட்ப உரை நிகழ்த்தினர். இடைக்காட்டூர் பஞ்சாயத்து தலைவர் சண்முகநாதன் உள்ளிட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வேளாண்மை கூடுதல் இயக்குநர் மற்றும் வேளாண்மை இணை இயக்குநர் ஆகியோர் முத்தனேந்தர் கிராமத்தில் SMAM திட்டத்தில் வழங்கப்பட்ட பவர்டில்லர், பதினேட்டாம்கோட்டை கிராமத்தில் CMMKMKS திட்டத்தில் நிறுவப்பட்ட அங்கக வேளாண்மை மாதிரி பண்ணை, மண் புழு உர உற்பத்தி படுக்கை, பாரம்பரிய நெல், கோனோ களைகருவி உபயோகம் குறித்து ஆய்வு செய்தனர்.

வேளாண் விரிவாகக் மையம், மானாமதுரையில் ஆய்வு செய்து இடுப்பொருள்கள், ஆடாதொடா, நொச்சி கன்றுகள், பேட்டரி தெளிப்பான்கள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு விநியோகித்தனர். நிகழ்ச்சிக்கு மானாமதுரை வேளாண் அலுவலர், துணை மற்றும் உதவி வேளாண் அலுவலர்கள், அட்மா, பயிர் காப்பீடு அலுவலர்கள் ஏற்பாடுகள் செய்து இருந்தனர்.



# சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் மலைவாழ் மக்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி



திருச்சி, டிச.12

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் திருச்சி மாவட்டத்தின் அனைத்து வட்டார விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, துறையூர் வட்டாரத்தை சேர்ந்த பச்சைமலை பகுதியில் உள்ள மலைவாழ் மக்களுக்கு தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.




பச்சைமலை பகுதியில் பொதுவாக, முந்திரி, மரவள்ளி, நெல், சிறுதானியங்கள் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. இச்சாகுபடி மூலம் விவசாயிகள் பயன் பெறும் பொருட்டு வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் மகசூலை அதிகரிக்க தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மூலம் வெளியிடப்பட்ட புதிய ரகங்கள் மற்றும் தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டன. இப்பயிற்சியில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். மேலும், நெல் பயிரில் மகசூலை அதிகரிக்கும் நெல் ரீப் மற்றும் பதரைக் குறைக்கும் நெல் ப்ளூம் பூஸ்டர் விவசாயிகளுக்கு முன்னிலை செயல்விளக்க திடல் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியினை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு ஒருங்கிணைத்தார். இணைப்பேராசிரியர்கள் முனைவர் சு.ஈஸ்வரன் மற்றும் முனைவர் எம்.மாரிமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# உளுந்து பயிரில் மஞ்சள் தேமல் நோயை கட்டுப்படுத்த வேளாண் துறை தகவல்

கள்ளக்குறிச்சி, டிச.12

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் சுமார் 42,000 எக்டர் பரப்பளவில் விவசாயிகள் உளுந்து பயிர் சாகுபடி செய்து உள்ளனர். தற்பொழுது சாகுபடி செய்யப்பட்டுள்ள உளுந்து பயிர்கள் பெரும்பாலும் வளர்ச்சி மற்றும் பூக்கும் பருவத்தில் காணப்படுகிறது.

தற்பொழுது சாகுபடி செய்யப்பட்டுள்ள உளுந்து பயிர்களில் ஆங்காங்கே மஞ்சள் தேமல் நோய் தென்படுகிறது. உளுந்து பயிரில் இலைகள் மஞ்சள் நிறமடைந்து உருமாறி, மஞ்சள் பகுதியும் பச்சை பகுதியும் மாறி மாறி காணப்படுவது இந் நோய்க்கான அறிகுறியாகும். நோய் தாக்கப்பட்ட செடிகளின் வளர்ச்சி குன்றி காணப்படும். தாக்குதலுக்கு உட்படும் பயிரின் மகசூல் பெருமளவு பாதிக்கப்படும். உளுந்து வயலில் ஆங் காங்கே மஞ்சள் தேமல் நோய் தென்படும்போது நோய் பாதிக்கப் பட்ட செடிகளை வயலில் இருந்து வேரோடு அகற்ற வேண்டும்.




ஆரம்ப வளர்ச்சி பருவத்தில் ஏக்கருக்கு 5 எண்கள் மஞ்சள் ஒட்டு பொறி வைப்பதன் மூலமும், வயல் மற்றும் வரப்புகளில் உள்ள களைகளை அகற்றுவதன் மூலமும் தாக்குதலை கட்டுப்படுத்தலாம். மேலும் மீத்தைல்டெமட்டான் 25 சிஈ ஏக்கருக்கு 200 மி.லி அல்லது டைமீத்தோயேட் 30 சிஈ ஏக்கருக்கு 200 மி.லி அல்லது தையோமீத்தாக்சம் 75 நிறு ஏக்கருக்கு 40 கிராம் அல்லது இமிடாகுளோபிரிட் 17.8 றீஸி ஏக்கருக்கு 100 மி.லி கலந்து தெளிப்பதன் மூலம் இந்நோயை பரப்பும் வெள்ளை ஈயை கட்டுப்படுத்தி நோய் தாக்குதலை கட்டுப்படுத்தலாம் என மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
CML-6400119610
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# மார்கழி - தை பட்டங்களுக்கேற்ற அடர் நடவு பருத்தி சாகுபடி



பொதுவாக நெல் மற்றும் நிலக்கடலை அறுவடை முடிந்த பிறகு இறவை மற்றும் தோட்டக்கால் பகுதிகளில் பருத்தி நடவு செய்வதை வழக்கமாக மேற்கொள் வார்கள். இந்த அடர் நடவு முறை சாதாரணமாக நடவு செய்யும் முறைக்கு முற்றிலுமாக மாறுபட்டது. வழக்கம்போல நடவு செய்வதை விட ஏக்கருக்கு கூடுதலான விதைகள் நடுவதால் கூடுதலான செடிகள் உருவாகி, வழக்கத்தை விட 20-40% மகசூல் ஒரு ஏக்கரில் கூடுதலாக கிடைக்கும். அதுவும் ஒரே நேரத்தில் இயந்திரங்களை கொண்டு அறுவடை செய்வதால் கூலி யாட்கள் பிரச்சனையும் கிடையாது. எனவே இந்தாண்டில் இந்த அடர்நடவு முறையில் (HIGH DENSITY PLANTING) பருத்தியை நடுவோம்.

**இந்த நடவு முறைக்கேற்ற இரகங்கள் என்ன?**

அஞ்சலி , கோ17, சூரஜ் விபிடி 2

**அடர் நடவு முறையின் பயன்கள் என்ன?**

இந்த முறையில் செடிக்கு செடிக்கான இடைவெளியை மண்வளத்திற்கேற்பவும் மண்கண்ட ஆழத்தை பொருத்து அதாவது 30 செ.மீட்டரிலிருந்து 10 செ.மீ யாக குறைப்பதன் மூலமாக பயிர் எண்ணிக்கை ஒரு ஏக்கருக்கு 44,400 முதல் 66400யாக அதிகரிப்பதால் கிட்டதட்ட ஒரே ஏக்கரில் 20000 செடிகள் அதிகரிப்பதால் இரட்டிப்பு பலன் கிடைக்கும்.

**நிலத் தயாரிப்பு**

பார்சால், படுக்கை முறையில் பாத்தி அமைக்கபட்டு தொழு உரம் இட்டு நிலத்தை தயாரிக்க வேண்டும்.

உரங்கள் NPK 30:15:15இதில் 50% தழைசத்துயுடன் முழுமையாக மணி சாம்பல் சத்துகளை இடவேண்டும். பருத்தி நுண்ணூட்ட உரத்தினை ஏக்கருக்கு 5 கிலோ கடைசியில் இடவேண்டும்.

**இடைவெளி**

60 X 10 செ.மீ – வளமற்ற மண் மற்றும் ஆழம் குறைந்த பகுதியில்
75 X 10 செ.மீ – நடுத்தர மண் ஆழம் மத்திய பகுதியில்
90 X 10 செ.மீ. – அதிக வளமான மண் பகுதியில்

மண்ணின் தன்மைகேற்ப இடைவெளி அமைத்து அடர் நடவை மேற்கொள்ளலாம்.

**களை நிர்வாகம்**

முளைக்கும் களையை கட்டுப்படுத்த விதைத்த 3-5 நாளில் பெண்டி மெத்தலின் 500 கிராம் / ஏக்கர் பயன்படுத்த வேண்டும்.

முளைத்த களைகளை கட்டுப்படுத்த விதைத்த 20-30வது நாளில் குயிசலோபாஸ் ஈத்தல் 20 கிராம் / ஏக்கர் அல்லது பைரித்ரியா பேக் சோடியம் 30 கிராம் தெளிக்க வேண்டும்.

**பூக்கள் காய்களை அதிகரிக்க**

1) பயிர் வளர்ச்சி ஊக்கியான பிளோனோ பிக்ஸ் (N.AA) 100 மி.லி / ஏக்கர் தெளிக்க வேண்டும்.

2) காய்கள் திரட்சியாகவும் பயிர்கள் நன்றாக வளர 2% டி.ஏ.பி உரக்கரைசல் தெளிக்க வேண்டும்.

3) மேலுரமாக 40-45 நாட்களில்15% தழைசத்தை (யூரியா) இட வேண்டும்.

**நுனிக் கிள்ளுதல்**

இது முக்கியமான செய்முறையாகும் பருத்தியின் வளர்ச்சியை கட்டுப்படுத்த இது உதவுவதுடன் அதிக பக்க கிளைகள் (SYM-BODIAL BRANCHES) உருவாகி காய்கள் எண்ணிக்கை அதிகரிக்க உதவும் என்பதால் பருத்தியின் வளர்ச்சியை கட்டுப்படுத்த நுனிக்கிள்ளுதல் (TAPPING) செய்ய வேண்டும்.

**அது எப்படி?**

ரகங்களாக இருந்தாலும் கூட 75-80வது நாளில் 15வது கணுவிலும், ஓட்டு ரகங்களாக இருந்தால் 85-90வது நாளில் 20 வது கணுவில் கணுவின்நுனியை 10 செ.மீ அளவிற்கு கிள்ளி விட வேண்டும்.

இவ்வாறாக செய்வதால் பூக்களும் காய்களும் அதிகமாக உருவாக்கி கூடுதலான மகசூல் கிடைக்கும். நுனி கிள்ளுதலுக்கு கூட ஏக்கருக்கு ஆட்கூலியாக 50% மானியம் அதாவது 400 உண்டு).

**பருத்தி சாகுபடியை ஊக்குவிக்க தமிழக அரசால் செயல் படுத்தப்படும் திட்டங்கள்**

1) அடர் நடவு சாகுபடி முறைக்கு 1960க்கு மதிப்பிலான இடு பொருட்கள் (INPUTS) வழங்குதல்

2) பூச்சி / நோய் மேலாண்மை செய்திட ஏக்கருக்கு 1680க்கான சுற்று சூழலியல்கேற்ற இடுபொருட்கள் வழங்குதல்




3) பருத்தி ஊட்டச்சத்து தொகுப்பு மானியமாக ஏக்கருக்கு 560 அல்லது 50% மானியம் வழங்கல்

4) ட்ரோன் மூலமாக பூச்சிக் கொல்லி மருந்து தெளிப்பதற்கு மானியமாக (50%) வாடகையாக 500/ எக்கர் வழங்குதல்

இதுபோல தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் (NADP) மற்றும் உணவு மற்றும் ஊட்டச்சத்துபாதுகாப்பு இயக்கம் (NFSM - COTTON) திட்டத்திலும் பருத்தி சாகுபடியை ஊக்குவிக்க மானியங்கள் வழங்கப்படுகின்றன.

மேலும் விபரங்களுக்கு தங்களுடைய வட்டாரத்திலுள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளவும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# அம்மாபேட்டை வட்டாரத்தில் சிறுதானிய சாகுபடி குறித்த விழிப்புணர்வு வாகன பிரச்சாரம்



சேலம், டிச.12

சேலம் மாவட்டம், அம்மாபேட்டை வட்டாரத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் சிறுதானிய சாகுபடி தொழில் நுட்பங்கள், சத்துமிகு சிறுதானிய உணவுகளின் நன்மைகள் குறித்த விழிப்புணர்வு வாகன பிரச்சார பேரணி நடைபெற்றது.






அம்மாபேட்டையில் நடந்த நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் பவானி தலைமை தாங்கி வாகனத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தார் . இதில் வேளாண்மை அலுவலர் வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சிறுதானியங்களின் சாகுபடி முறைகள் மற்றும் சிறுதானிய உணவுகள் குறித்த துண்டு பிரசுரங்கள் விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் வழங்கப்பட்டன. இந்த பிரச்சாரத்தில் சோளம், கம்பு, ராகி, திணை மற்றும் குதிரைவாலி உட்பட சிறுதானிய பயிர்கள் சாகுபடி குறித்த விழிப்புணர்வு விவசாயிகளுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் ஏற்படுத்தப்பட்டது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் ராகி செயல்விளக்கத்திடல் அமைக்க விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்பு

கிருஷ்ணகிரி, டிச.12

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் வேளாண் துறையின் மூலம் (NFSM – Nutri cereals 2024-25) உணவு ஊட்டச் சத்து பாதுகாப்பு இயக்கம் – சிறுதானிய செயல்விளக்கத் திடல் செயல்பட உள்ளது. வேப்பனப்பள்ளி வேளாண்மை உதவி இயக்குநர் சிவநதி தெரிவித்துள்ளவாறு ராகி செயல்விளக்கத்திடல் அமைக்க 1 எக்டருக்கு 6000/– ரூபாய்க்கான இடுப்பொருட்கள் மானியத்தில் வழங்கப்பட உள்ளது. ஆர்வமுள்ள விவசாயிகள் அந்தந்த பகுதிக்குட்பட்ட உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டு இத்திட்டத்தினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்திட்டத்திற்கு தேவையான ஆவணங்கள் சிட்டா, ஆதார் நகல், வங்கி புத்தகம் நகல், போட்டோ இந்த ஆவணங்கள் தங்கள் பகுதி அலுவலரிடம் கொடுத்து மானியம் பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.




# முள்ளங்கியில் மென்மை அழுகல் நோயும் அதன் மேலாண்மை முறைகளும்



முள்ளங்கி ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும் நிலத்தடி காய்கறிகளுள் ஒன்றாகும். இதில் பல்வேறு வைட்ட மின்களும், தாதுக்களும் நிறைந்துள்ளன. முள்ளங்கி பல்வேறு வயிறு தொடர்பான சிக்கல்களுக்கும், குடல் நோய்களுக்கு சிகிச்சை அளிக்கவும் உதவுகிறது. இது பசியின்மை, காய்ச்சல் மற்றும் தொண்டை வீக்கம் போன்ற பிரச்சினைகளை குணப்படுத்துகிறது.

முள்ளங்கியில் பல்வேறு வகையான மருத்துவ குணங்கள் நிறைந்துள்ளது. முள்ளங்கியின் இலைகள் மற்றும் விதிகளும் உடலுக்கு பயனுள்ளதாக இருக்கிறது. முள்ளங்கியில் ஏற்படும் மென்மை அழுகல் நோயும் அதன் மேலாண்மை முறைகள் பற்றியும் இங்கு காண்போம்.

### நோய்க்காரணி

இந்நோய் எர்வினியா காரடோவோரா என்னும் ஒரு வகை பாக்டீரியாவால் தோற்றுவிக்கப்படுகிறது. இவை நீண்ட உருளை வடிவில், தனித்தனியாகவோ அல்லது இரட்டையாகவோ அல்லது பல பாக்டீரியா ஒன்று சேர்ந்து, ஒரு சங்கிலித்தொடர் போலவோ காணப்படும்.

### நோயின் அறிகுறிகள்

பயிர் அறுவடைக்குப் முன்னர், நிலத்தின் அடியில் காணப்படும் கிழங்குகளையும், அறுவடைக்குப் பின்னர் சேமித்து வைக்கப் படும் கிழங்குகளையும் இந்நோய் தாக்கக் கூடியது.

கிழங்குகளின் மேல் மென்மையான, ஈராக்கசிவு கொண்ட, ஒழுகற்ற வடிவமுள்ள புள்ளிகள் தென்படும். முதலில் மேற் படையாகத் தோன்றும் இப்புள்ளிகள், வேகமாகப் பரவி கிழங்கு களின் உட்புறத்தையும் தாக்கும். கிழங்குகளினுள், நோய் நன்கு பரவும் வகையில் தழைப்பாகம் பசுமையாகவே காணப்படும். கிழங்கின் பெரும்பாகம் அல்லது கிழங்கு முழுவதும் தாக்கப்பட்ட

பின்னரே செடிகள் வாடத் தொடங்கும். அறுவடைக்குப் பின்னர் நோய்த் தாக்கிய கிழங்குகள், மற்ற கிழங்குகளுடன் சேமித்து வைக்கும் போதும் நோய் வேகமாகப் பரவி, மற்ற கிழங்கு களையும் தாக்கும். அறுவடையின் போதும், வயலிலிருந்து சேமித்து வைக்கப்படும் இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் போதும், கிழங்குகளில் ஏற்படும் சிறு காயங்கள் மற்றும் சிராய்ப்புக்கள் வழியாக, நோய் தாக்கிய கிழங்குகளிலிருந்து வெளிவரும், பாக்டீரியா உட்புகுந்து புதிதாக, நோயைத் தோற்று விக்கும். பாக்டீரியா கிழங்கினுள் புகுந்தப் பின்னர், அவை வேகமாக இனப்பெருக்கம் அடைந்து, கிழங்கு முழுவதையும் தாக்கும். காரத்தன்மை மண்ணில் அதிகம் காணப்படும் போது, நோய்த் தாக்குதலும் அதிகமாகக் காணப்படும்.

**நோய்ப் பரவும் விதமும் பரவுவதற்கு ஏற்ற காலநிலைகளும்**

இந்நோய்க்காரணி ஒரு பகுதி இறந்த திசுவாழ் உயிரி. மண்ணில் விழுந்துக் கிடக்கும், நோய்த் தாக்கிய அழுகிய செடிகளின் பாகங்கள், மக்கிய கரிமப் பொருட்கல் மற்றும் நோய்த் தாக்கிய கிழங்குகளினுள்ளும், இறந்த திசுவாழ் உயிரிகளாக நீண்ட காலம் உயிர் வாழக் கூடியவை.



நோய்த் தாக்கப்பட்ட கிழங்கின் தோற்றம்

**நோய்க்கட்டுப்பாடு**

**உழவியல் முறைகள்**

இந்நோய்த் தோற்றுவிக்கும் பாக்டீரியா பெரும்பாலும் கிழங்குகளில் காணப்படும் காயங்கள், காயங்கள் வழியாக மாத்திரமே உட்செல்லக் கூடியவை. ஆகவே ஊண்வழங்கிச் செடிகளுக்கோ அல்லது கிழங்குகளுக்கோ இடை உழவியல் பணிகளின் போதோ, அறுவடையின் போதோ அல்லது கிழங்குகளை எடுத்துச் செல்லும் போதோ, காயங்கள் உண்டாக தவாறு கவனமாகக் கையாள வேண்டும்.

நோய்த் தாக்காத கிழங்குகளுடன் நோய்த் தாக்கிய கிழங்கு களை ஒன்றாக சேமித்து வைக்கக் கூடாது. நோய்த் தாக்கிய செடியின் பாகங்கள் மற்றும் கிழங்குகள் மண்ணில் கிடக்காத வாறு அவற்றை அப்புறப்படுத்தி அழித்து விட வேண்டும்.

நோயின் அறிகுறிகள் தென்பட்ட செடிகளை உடனுக்குடன் அப்புறப்படுத்தி அழித்து விட வேண்டும். நோய்த்தாக்கியப் பகுதிகளிலிருந்து அல்லது நோய்த் தாக்கிய பயிரிலிருந்து விதைகளைத் தேர்ந்தெடுக்கக் கூடாது. குளிர்பதன வசதி கொண்ட சேமிப்புக் கிடங்குகளில், கிழங்குகளை சேமித்து வைப்பதன் மூலம், நோய்த் தோன்றுவதையும், பரவுவதையும் குறைக்கலாம்.

கட்டுரையாளர்கள் : கு.விக்னேஷ், கோ.அர்ஷா மற்றும் K.செல்வம், உதவிப் பேராசிரியர்கள், பாலாறு வேளாண்மைக் கல்லூரி, ஆம்பூர் – 635 805. தொடர்பு எண் : 82488 33079, மின்னஞ்சல் : lakshmikumar5472@gmail.com





இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நாமக்கல் மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறும் விவசாயிக்கு விருது

நாமக்கல், டிச.12

நாமக்கல் மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறும் விவசாயிக்கு விருது வழங்கப்படும்.

நாமக்கல் மாவட்டம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை இணை இயக்குநர், கலைசெல்வி வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது, மாவட்டத்தில் 2024-25ம் ஆண்டிற்கான உரிய தொழில்நுட்பத்தினை கடைபிடித்து செம்மை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு மாநிலத்தில் அதிக மகசூல் பெறும் விவசாயிகளுக்கு நாராயாணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது அறிவிக்கப்பட்டு, அதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் தமிழக அரசால் வெளியிடப்பட்டுள்ளது. இப்போட்டியில் கலந்து கொண்டு மாநில அளவில் முதலிடம் பெறும் விவசாயிகளுக்கு முதல் பரிசாக ரூ.5 லட்சம் சிறப்பு பரிசு மற்றும் ரூ.7000/- மதிப்புள்ள பதக்கமும் வழங்கப்படும். போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிக்கு குறைந்த பட்சம் 2 ஏக்கர் நிலம் சொந்தமாகவோ அல்லது குத்தகையாகவோ திருந்திய முறையில் நெல் சாகுபடி செய்திருக்க வேண்டும்.

மேலும் பயிர் விளைச்சல் போட்டியில் குறைந்த பட்சம் 50 சென்ட் நடுவர்கள் முன்னிலையில் அறுவடை செய்யப்படும். இப்போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிகள், அரசால் அங்கீகரிக்கப்பட்ட நெல் ரகங்களை மட்டுமே பயிர் செய்திருக்க வேண்டும். எனவே, இத்திட்டத்தில் பங்கு பெற விரும்பும் விவசாயிகள் தங்களது வட்டார வேளாண்மை உதவி இயக்குநரை அணுகி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் பதிவு கட்டணமாக ரூ.150/- ஐ செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும். வெற்றியாளர்களை அறிவிப்பதில் வேளாண்மை இயக்குநர் தலைமையிலான மாநில அளவிலான குழுவின் முடிவே இறுதியானது. எனவே விவசாயிகள் அனைவரும் இப்போட்டியில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**



Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
CML-6400119610
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO 9001 CERTIFIED
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# நெல் விதைப் பண்ணைகளில் விதைச் சான்று உதவி இயக்குநர் ஆய்வு

கோயம்புத்தூர், டிச.12

கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர் வட்டடாரத்தில் பச்சான் வயல் பகுதியில் சுமார் 120 ஏக்கர் பரப்பளவில் நெல் விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளது. இதனை கோவை விதைச்சான்று உதவி இயக்குநர் பி.ஆ.மாரிமுத்து ஆய்வு செய்தார்.

நெல்லில் புதிய சன்ன ரகமான Co 55 2022ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தால் வெளியிடப்பட்டு இது விவசாயிகளிடையே பெறும் வரவேற்பை பெற்றுள்ளது.






Co 55 ஆதார நிலை, விதைப்பண்ணையில் முதிர்ச்சி பருவ ஆய்வு செய்த கோவை விதைச்சான்று உதவி இயக்குநர் கூறியதாவது, தரமான விதை உற்பத்திக்கு அதே ரகம் மற்றும் பிறரகப் பயிரில் இருந்து வயலைச் சுற்றி மூன்று மீட்டர் இடைவெளியை கடைபிடித்தல் வேண்டும். இதனால் பயிரின் விதை தூய்மை பாதுகாக்கபடும், பிற ரகங்களில் 0.05 (%) சதவீதம் மட்டுமே இருக்க அனுமதி வழங்கப்படுகிறது.

Co 55 நெல் ரகமானது 90-100 செ.மீ அளவு உயரம் வளரக் கூடியது.சன்னரகமான Co 55 நெல் ரகமானது குறுவை, சம்பா பருவத்தில் பயிர் செய்வதற்கு ஏற்ற இரகம் ஆகும்.

மேலும் இந்த இரகம் சாப்பாட்டிற்கு ஏற்ற சன்ன ரகமாகவும் மார்கெட்டில் நல்ல விலை கிடைப்பதாலும் அனைத்து விவசாயி களும் வரும் பருவங்களில் இந்த இரகத்தினை தங்களின் வட்டாரத்தில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவல கத்தில் வாங்கி பயிர் செய்து பயனடையுமாறு கேட்டுகொண்டார்.

ஒரு குத்திற்கு 18 முதல் 20 கதிர்களும், ஒரு கதிரில் சுமார் 220 முதல் 240 நெல் மணிகளையும் கொண்டு குறுகிய காலத்தில் அதிக மகசூலை தரக்கூடிய இரகம் ஆகும். மேலும் இது குறுகிய காலமான 110-115 நாட்களில் அறுவடைக்கு வரும் எனவும், 1000 விதைகளின் எடை 14.24 கிராம் அளவை கொண்டு சன்ன ரகமாக அதாவது சாப்பாட்டுக்கு ஏற்ற வகையில் உள்ளது என்றும், எனவே இது விவசாயிகளிடையே வரவேற்பை பெற்று வருகிறது.

மேலும் ஏக்கருக்க 2600 முதல் 2800 கிலோ வரை மகசூல் தரவல்லது என்றும் தெரிவித்தார். அறுவடைக்கு பின் விதைகளை சுத்தம் செய்து கல், மண், இலை மற்றும் பதர் ஆகியவற்றை நீக்கி உலர வைத்து ஈரப்பதத்தை 13% அளவிற்கு குறைத்து, புதிய கோணிப்பைகளில் மூட்டை பிடிக்க வேண்டும் எனவும் கூறினார்.

ஆய்வின் போது விதைச் சான்று அலுவலர்கள் ரா.செல்லம் மாள், பேளூர், கா.பாரதி, துடியலூர் மற்றும் உதவி விதை அலுவலர் தொண்டாமுத்தூர் சுப்பிரமணி ஆகியோர் உடனிருந்தனர்.

# பயிர்களைத் தாக்கும் நோய்களை கட்டுப்படுத்தும் நுண்ணுயிர்கள்

பயிர்களைத் தாக்கும் பூஞ்சாணம் மற்றும் பாக்டீரியா நோய்களை கட்டுப்படுத்த பூமியில் வாழும் நுண்ணுயிர்கள் பற்றி சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

### 1. டிரைக்கோடெர்மா விரிடி

இது பூஞ்சாண வகையைச் சேர்ந்த நுண்ணுயிர். பயிர்களைத் தாக்கி சேதம் செய்யும், பூசணங்களை கட்டுப்படுத்தக்கூடிய எதிர் உயிர் பூசணம். குறிப்பாக வாடல் மற்றும் வேர் அழுகல் நோய்களை ஏற்படுத்தும் கிருமிகளை கட்டுப்படுத்தும். பயிர்களின் வேர்களைச்சுற்றி பாதுகாப்பு வளையத்தை இந்த டிரைகோடொமா விரிடி பூசணம் உருவாக்கும். எனவே, பிற நோய் கிருமிகள் உள்ளே நுழைய முடியாது.

நோயை ஏற்படுத்தும் கிருமிகளுக்குத் தேவைப்படும், இரும்பு சத்தை கிடைக்காமல் செய்துவிடும். இதனால் நோயை ஏற்படுத்தும் கிருமிகளின் வீரியம் குறைந்துவிடும்.

எனவே பயிர்களில் நோய் ஏற்பட வாய்ப்பு இல்லை. நோய்க் கிருமிகளை மற்றும் பூசண வித்துக்கள் முளைப்பதை இந்த விரிடி தடை செய்யும். எனவே பயிர்களுக்கு நோய்கள் ஏற்படாதவாறு பாதுகாத்துத் தருகிறது.

**2. சூடமோனஸ் ப்ளோரசன்ஸ்**

இது நமக்கு நன்மை செய்யும் பேக்டீரியா நுண்உயிர் ஆகும். மண் மற்றும் காற்று மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தும். நெல் பயிரைத் தாக்கும் இலைக்கருகல், இலை உறை கருகல், குலைநோய், தானியம் நிறம் மாறும் நோய் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும்.

வேர் அழுகல், தூர்வாடல், தண்டு அழுகல், இலை அழுகல் ஆகிய நோய்களைக் கட்டுப்படுத்தும். நன்மை செய்யும் மற்ற பேக்டீரியாக்களைவிட இது மிகவும் சக்தி வாய்ந்தது. பயிரின் நோய் எதிர்ப்பு சக்தியினை துரிதமாக தூண்டி நோய்களைக் கட்டுப்படுத்தும் மேலும் நுண்சத்துக்களை அதிகமாக கிடைக்கச் செய்யும்.

